பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
30 05 2025 **FRIDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கான நியாயமான காரணத்தை ஒட்டுமொத்த உலகமும் நன்கு உணர்ந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நீட் முதுநிலை தேர்வை ஒரே அமர்வாக நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

3. எல்சா-3 கப்பல் கடலில் மூழ்கிய விபத்தால், தமிழக கடலோர மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மூன்று தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<<<<>>>>>>>

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கான நியாயமான காரணத்தை ஒட்டுமொத்த உலகமும் நன்கு உணர்ந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேசத்தின் கான்பூரில் இன்று பிற்பகல் 47 ஆயிரத்து 573 கோடி ரூபாய் மதிப்பிலான 15 மாபெரும் வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய அவர், முப்படையினர் மேற்கொண்ட துல்லியமான ராணுவ நடவடிக்கையால், பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத மையங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையால், ஒடுங்கிப் போயுள்ள நாட்டின் எதிரிகள், இந்த நடவடிக்கை இன்னும் முடியவில்லை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

பாகிஸ்தானுக்கும், அந்நாட்டிலிருந்து வெளியாகும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கும் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நமது முப்படையினரின் வீரத்திற்கும் தைரியத்திற்கும் ஈடுகொடுக்க முடியாமல் போர் நிறுத்தம் குறித்த கோரிக்கையை பாகிஸ்தான் முன்வைத்ததாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

முன்னதாக, கான்பூர் மெட்ரோ ரயில் சேவையின் புதிய வழித்தடத்தை பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

<<<<<<<>>>>>>>

நீட் முதுநிலை தேர்வை ஒரே அமர்வாக நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் இத்தேர்வு இரண்டு அமர்வாக நடத்தப்படுவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி திரு. விக்ரம்நாத் தலைமையிலான அமர்வு, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

MD, MS உள்ளிட்ட முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு வரும் 15ஆம் தேதி நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>>

பிரஸார் பாரதி நிறுவனம் இலவசமாக செய்தி வழங்கும் தளமான **pbshabd** என்ற இணையதளத்தை உருவாக்கியுள்ளது.

இதில் நாடுமுழுவதிலும் உள்ள நிறுவனத்தின் செய்தியாளர்கள் வழங்கும் செய்தித் தொகுப்புகள் இடம்பெறும்.

இதனை ஊடகங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று பிரஸார் பாரதி தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

கேரள மாநிலம், கொச்சி அருகே எல்சா-3 கப்பல் கடலில் மூழ்கிய விபத்தால், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று சுற்றுச்சூழல் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

சென்னை, தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தலைமைச்செயலாளர் திரு. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள் திருமதி. சுப்ரியா சாஹூ, திருமதி. அமுதா, மீன்வளத்துறை செயலாளர் திரு. சுப்பையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் இந்த ஆண்டு ஏழைகளுக்கு ஒரு லட்சம் கான்கிரிட் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று மாநில நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

மாநிலத்தில் மொத்தம் 10 லட்சம் கான்கிரிட் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

அம்பாசமுத்திரம் சுற்றுவட்டாரத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளை ஒன்றிணைத்து, அம்பாசமுத்திரம் நகராட்சியை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. கே.என். நேரு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் நிகழும் கொலை குற்றச்சம்பவம் குறித்த வழக்குகளை விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்காக போலி குற்றவாளிகளை கைது செய்யும் போக்கை நிறுத்த வேண்டும் என்று மாநில அரசை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரோடு மாவட்டம், சிவகிரியில் கடந்த மாதம் வயதான தம்பதியர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கைது செய்யப்பட்ட 3 பேர், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த 12 குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டதாக ஒப்புக் கொண்டுள்ளனர் என்று காவல்துறை கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது உண்மையானால், உப்பிலிப்பாளையம், ஒட்டன்குட்டை, சேமலைக்கவுண்டன்பாளையம் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட 11 பேர் அப்பாவிகளா என்று திரு. எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தை சீரமைப்பதில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருநெல்வேலியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்விரு மாவட்டங்களில் உள்ள குளங்களை தூர் வாரி, அதிக தண்ணீரை சேமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலிருக்கு உத்ராகண்ட் மாநிலத்திலிருந்து யானை வாங்குவது குறித்து, முதலமைச்சரிடம் பேசவிருப்பதாகவும் அவர் கூறினார்.

பாமக-வின் உட்கட்சி பிரச்சினைக்கும், பிஜேபிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று குறிப்பிட்ட திரு. நயினார் நாகேந்திரன், இதில் பிஜேபி தலையிடாது என்றும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 53 செகண்ட்ஸ்)

இதனிடையே, நீலகிரி மாவட்டத்தில் விடுக்கப்பட்டிருந்த சிவப்பு நிற எச்சரிக்கை, ஆரஞ்ச் எச்சரிக்கையாக குறைக்கப்பட்டுள்ளதால், உதகையில் ஒரு சில பூங்காக்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு திறந்துவிடப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. லக்ஷ்மி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

நிலச்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் 39 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

மாவட்டச் செய்திகள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் நெல்வரத்து அதிகரித்துள்ளதால், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அதிக அளவில் திறக்கப்பட்டுள்ளதாக சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. பிச்சாண்டி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

ராணிப்பேட்டையில் நடைபெற்ற வேளாண் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்த செயல்விளக்க முகாமை ஆட்சியர் திருமதி. சந்திரகலா பார்வையிட்டார்.

<<<<<<<>>>>>>>

உளுந்தூர்பேட்டையில் நடப்பாண்டில் புதிதாக தொடங்கப்படவுள்ள அரசு கலை அறிவியல் கல்லூரிக்கான தற்காலிக கட்டிடத்தை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

<<<<<<<>>>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் அருகேயுள்ள வட்டம்பாக்கத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<<<<>>>>>>>

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் இளநிலை பட்டப் படிப்புகளுக்கு வரும் 9ஆம் தேதி முதல் 14ஆம் தேதிவரை மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைபெறும் என்று கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மூன்று தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

தென்கொரியாவில் நடைபெற்ற ஆடவர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பிரிவில் இந்தியாவின் குல்வீர் சிங்-ம், மகளிர் உயரம் தாண்டுதலில் பூஜாவும், **Heptathlon** பிரிவில் **Nandhini Agasara**-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 3 ஆயிரம் மீட்டர் **Steeplechase** பிரிவில் **Parul Chaudhary** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 8 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலம் என 18 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்றில் குஜராத் மற்றம் மும்பை அணிகள் இன்று மோதுகின்றன.

இப்போட்டி சண்டிகரில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>>>